# முத்தாயம்மாள் நினைவு கல்லூரியில் ஆங்கிலத்துறைக் கருத்தரங்கு

இராசிபுரம் - காக்காவேரியில் அமைந்துள்ள - முத்தாயம்மாள் நினைவு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் ஆங்கிலத்துறையின் சார்பில் 'ஷேக்ஸ்பியர் - நாடகப் பாத்திரங்கள்' என்ற தலைப்பிலான 1 நாள் கருத்தரங்கு 24.03.2017 அன்று கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு கல்லூரித் தலைவர் திரு. ஆர். இராமசாமி தலைமை தாங்கினார். செயலர் திரு. ஆர். ஜெயப்பிரகாஷ், பொருளாளர் திரு. ஆர். பிரேம்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரி முதல்வர் முனைவர். எம். ஆர். லட்சுமிநாராயணன் அனைவரையும் வரவேற்றார்.

சிறப்பு அழைப்பாளராக இராசிபுரம் - திருவள்ளுவர் அரசுக் கல்லூரியின் ஆங்கிலத்துறை உதவிப்பேராசிரியர் முனைவர். எஸ். குமரன் கலந்து கொண்டார்.

அவர்தன் உரையில் குறிப்பிடுகையில் இங்கிலாந்தின் தேசியக்கவிஞர் எனப் பலராலும் அழைக்கப்பட்ட ஷேக்ஸ்பியர் தன்னுடைய 48 வயது வரை ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறுகதைகள், நாடகங்கள், கவிதைகள் எழுதியுள்ளார். 'உலகமே நாடகமேடை' என நமக்கு எடுத்துரைத்த அவருடைய நாடகங்கள் காலத்தால் என்றும் அழியாதது. தன்னுடைய நாடகங்களில் நவீன ஆங்கிலத்தைப் புகுத்தியவர். அவருடைய ரோமியோ ஜூலியட் என்ற துன்ப நாடகம் நம் அனைவராலும் மறக்கமுடியாது. அவருடைய பல நாடகங்கள் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன என்றார். அவர் எழுதிய நாடகங்களான ஜூலியஸ் சீசர், லியர் மன்னன், மாக்பெத், ஹாம்லெட் என்பவை மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்றவை என்றார்.

அவர் தன் உரையில் மேலும் குறிப்பிடுகையில் ஷேக்ஸ்பியர் நாடகத்துறைக்கு ஆற்றியப்பணிகள், அவருடைய நாடகங்களில் உள்ள நகைச்சுவை, காதல், வரலாறு, ஆகியவற்றினை அவர் எடுத்துரைத்தார்.

இக்கருத்தரங்கில் கல்லூரி ஆலோசகர் திருமதி. அகிலா ஜெயப்பிரகாஷ், ஆங்கிலத்துறைத்தலைவர் திரு. ஏ. பர்னபாஸ் உட்பட 150-க்கும் மேற்பட்ட ஆங்கிலத்துறை மாணவ, மாணவிகளும், 15-க்கும் மேற்பட்ட கல்லூரிப்பேராசிரியர்களும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் ஷேக்ஸ்பியர் நாடகம், மைம் நிகழ்ச்சி, கலந்துரையாடல் ஆகியவை நடைபெற்றன.

24/3/17

Muthayammal Memorial College of Arts & Science Kakkaveri-637 408, Rasipuram Tk, Namakkal Dt